**நிகழும் ஸ்ரீ விசுவாவசு வருடம் மார்கழி மாதம் 16 ஆம் நாள் (31.12.2025) புதன்கிழமை அன்று முற்பகல் 11.30 மணிக்கு நாமக்கல் மாநகராட்சி மாமன்ற கூடத்தில் நடைபெற்ற அவசர கூட்டப்பொருள்**

பொருள் எண். 1 :

அரசாணை (நிலை) எண்.105, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.10.08.2024–ன்படியும், தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.257, நாள்.10.08.2024–ன் படியும், கீழ்கண்ட 12 ஊராட்சி பகுதிகளை இணைத்து நாமக்கல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால், நாமக்கல் மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களிடம், மாநகராட்சி பணியில் பணிபுரிய விருப்பமா அல்லது நகராட்சி பணியில் பணிபுரிய விருப்பமா என விருப்ப கடிதம் பெற்று, அதனை மாமன்ற ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, நாமக்கல் மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடம் விருப்ப விண்ணப்பம் பெற்று உரிய பட்டியல் மாமன்ற தீர்மானம் எண்.26, நாள்.23.05.2025 மற்றும் திருத்திய பட்டியல் மாமன்ற தீர்மானம் எண். 567, நாள்.16.10.2025ஆம் தேதிகளில் ஒப்புதல் பெற்று கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படியான நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்ட கருத்துருவில் கீழ்க்கண்ட விவரப்படியான பணியாளர்கள் விருப்ப விண்ணப்பம் வழங்கியுள்ளார்கள்.

| வ. எண். | பணியாளர் பெயர் மற்றும் பதவி | பணியில் தொடர்வது தொடர்பாக விருப்பம் தெரிவித்த விவரங்கள் |
|---|---|---|
| 1 | திரு. இரா.அன்பழகன், இளநிலை உதவியாளர் | நகராட்சி பணியில் தொடர விருப்பம் |
| 2 | திரு. சீ.ஜெய்சங்கர்,<br>புள்ளி விவரக் குறிப்பாளர் | மாநகராட்சி பணியில் தொடர விருப்பம் |
| 3 | திரு. ரா.அன்பரசன்,<br>வருவாய் உதவியாளர் (அயற்பணி) திண்டிவனம் நகராட்சியிலிருந்து பணி மாறுதலில் அயற்பணியில் பணிபுரிந்து வருகிறார் | நகராட்சி பணியில் தொடர விருப்பம் |
| 4 | திரு. பா.கிஷோர்,<br>வருவாய் உதவியாளர் (அயற்பணி) திருப்பத்தூர் நகராட்சியிலிருந்து பணி மாறுதலில் அயற்பணியில் பணிபுரிந்து வருகிறார் | நகராட்சி பணியில் தொடர விருப்பம் |
| 5 | திரு. ச.சந்தோஷ் லிவிங்ஸ்டன்,<br>வருவாய் உதவியாளர் | நகராட்சி பணியில் தொடர விருப்பம் |
| 6 | திரு. சு.சரண்ராஜ்,<br>வருவாய் உதவியாளர் | நகராட்சி பணியில் தொடர விருப்பம் |

தற்போது, மேற்படி பட்டியலில் கண்டுள்ள 6 பணியாளர்கள் கீழ்க்கண்ட விவரப்படி விருப்ப விண்ணப்பங்களை மாற்றி வழங்கியுள்ளார்கள்.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பதவி | தற்போது மாற்றி விருப்பம் தெரிவித்த விவரங்கள் |
|---|---|---|
| 1 | திரு.இரா.அன்பழகன், இளநிலை உதவியாளர் | மாநகராட்சி பணியில் தொடர விருப்பம் |
| 2 | திரு. சீ.ஜெய்சங்கர், புள்ளி விவரக் குறிப்பாளர் | நகராட்சி பணியில் தொடர விருப்பம் |

| | | |
|---|---|---|
| 3 | திரு. ரா.அன்பரசன், வருவாய் உதவியாளர் (அயற்பணி) திண்டிவனம் நகராட்சியிலிருந்து பணி மாறுதலில் அயற்பணியில் பணிபுரிந்து வருகிறார் | மாநகராட்சி பணியில் தொடர விருப்பம் |
| 4 | திரு. பா.கிஷோர், வருவாய் உதவியாளர் (அயற்பணி) திருப்பத்தூர் நகராட்சியிலிருந்து பணிமாறுதலில் அயற்பணியில் பணிபுரிந்து வருகிறார் | மாநகராட்சி பணியில் தொடர விருப்பம் |
| 5 | திரு. ச.சந்தோஷ்லிவிங்ஸ்டன், வருவாய் உதவியாளர் | மாநகராட்சி பணியில் தொடர விருப்பம் |
| 6 | திரு. சு.சரண்ராஜ், வருவாய் உதவியாளர் | மாநகராட்சி பணியில் தொடர விருப்பம் |

எனவே, நாமக்கல் மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட மாற்றி விருப்பம் தெரிவித்துள்ள விருப்ப விண்ணப்பங்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திருத்திய கருத்துரு அனுப்பி வைக்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மாநகராட்சி பணியில் தொடர விருப்பம் தெரிவித்தும், நகராட்சி பணியில் தொடர விருப்பம் தெரிவித்தும் வரப்பெற்ற விண்ணப்பங்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திருத்திய கருத்துருவாக அனுப்பி வைக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண்.6809/2024/சி1)**

**தீர்மானம் எண்.** 900 : அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 2 :</u>

நாமக்கல் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தெருநாய்கள் மற்றும் வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கும் அதனை வளர்க்க உரிமம் (Licence) வழங்குவதற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வு நோட்டீஸ்கள் கீழ்கண்டுள்ள விவரப்படி தேவைப்படுகிறது.

| வ. எண். | தேவைப்படும் படிவங்கள் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1 | படிவம்–2 உரிம விண்ணப்பம் | 2000 |
| 2 | படிவம்–10 உரிமம் | 2000 (20 புக்) கார்பன் காபி |
| 3 | படிவம் –3 அடையாள பதிவேடு | 2000 (20 புக்) |
| 4 | விண்ணப்ப பதிவேடு | 10 (100) |
| 5 | உரிம பதிவேடு | 10 (100) |
| 6 | விழிப்புணர்வு நோட்டீஸ் | 5000 |
| 7 | சட்டபடியான அறிவிப்பு | 2000 (20புக்) |

எனவே, மேற்கண்ட படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களை தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வ், திருச்சி அரசு கூட்டுறவு அச்சகத்தில் புதிய வடிவமைப்பில் நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கு பொது நிதியில் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> மாமன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.7807/2025/எச்1)**

**தீர்மானம் எண்.** 901 : அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 3 :</u>

அரசாணை (Ms) எண்.390, பொது (முதல்வரின் முகவரி) துறை, நாள்.19.06.2025இல் நாமக்கல் மாநகராட்சிக்குட்பபட்ட பகுதிகளில் 33 எண்ணிக்கையிலான "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களை நிலையான வழிக்காட்டி நெறிமுறைகளின்படி (SOP) நடத்திட அறிவுறத்தப்ட்டுள்ளது. அவ்வாறு முகாம்கள் நடத்திட நாமக்கல் மாவட்ட ஆட்சித்

தலைவர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.16003/2025/ஜி4, நாள்.01.07.2025இன் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15.07.2025 முதல் 10.10.2025 வரை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" என்ற பெயரில் நடத்தப்பட்ட முகாம்களில் கலந்துக்கொண்டு பணியாற்றிய அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தினசரி 220 நபர்களுக்கு தேநீர், பிஸ்கட், சுத்திகரிக்கப்பட்ட நீர் மற்றும் மதிய உணவு வழங்கும் பணியினை ரூ.8,19,195/- செலவினத்தில் மேற்கொள்ள உள்ளூர் உணவகங்களிடமிருந்து மூன்று விலைப்புள்ளி றெப்பட்டுள்ளது.

| வ. எண். | உணவகத்தின் பெயர் மற்றும் முகவரி | உணவு பொருட்களின் ஒரு நபர் ஒன்றிற்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | வரலட்சுமி மகளிர் குழு சிறுதானிய உணவகம், ஆட்சியர் அலுவலக வாளகம், நாமக்கல் | 231.75/- |
| 2. | மதி சிறுதானிய உணவகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், நாமக்கல் | 242/- |
| 3. | ஹோட்டல் கீர்த்திக், கவிஞர் இராமலிங்கம் மகளிர் கலைக்கல்லூரி அருகில், நாமக்கல் | 245/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண். 1இல் காணும் வரலட்சுமி மகளிர் குழு சிறுதானிய உணவகம், ஆட்சியர் அலுவலக வாளகம், நாமக்கல்உணவகத்தின் மூலம் 220 நபர்களுக்கு உணவு வழங்கியதையும், மேற்கண்ட பணிக்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியலிருந்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57இன்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.3918/2025/பி3)**

**தீர்மானம் எண்.** 902 : பதிவு செய்யப்பட்டது.

பொருள் எண். 4 :

அரசாணை நிலை எண்.324, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.17.10.2025 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நாள்.18.10.2025இல் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகளை மேம்படுத்த வார்டு அளவிலான சிறப்பு கூட்டம் நடத்த தெரிவிக்கப்பட்டதின்படி, நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட 39 வார்டுகள் மற்றும் இணைக்கப்பட்ட 12 ஊராட்சி பகுதிகளில் மொத்தம் 51 இடங்களில் காலை 26 இடங்களிலும் மாலை 25 இடங்களிலும் சிறப்பு வார்டு கூட்டம் 29.10.2025ஆம் தேதியில் நடத்த ஆணையாளர், நாமக்கல் மாநகராட்சி அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.6135/2025/பி3, நாள்.23.10.2025இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 29.10.2025அன்று சிறப்பு வார்டு கூட்டம் நடைபெற்ற 51 இடத்திற்கும் தேநீர் 50 நபர்கள் வீதம் கீழ்கண்ட விவரப்படி நாமக்கல் புஷ்பா டிபன் சென்டர்உணவகத்திலிருந்து தேநீர் வாங்கி வழங்கிய வகையில் ரூ.42,000/- செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண். | தேநீர் விநியோகம் செய்யப்பட்ட விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 51 இடத்திற்கு 50 தேநீர் x ரூ.12 | 30,600/- |
| 2. | டிரம் வாடகை | 2,200/- |
| 3. | ஆட்டோ வாடகை | 9,200/- |
| | **மொத்தம்** | **42,000/-** |

எனவே, மேற்கண்ட51 இடங்களுக்குநாமக்கல்புஷ்பா டிபன் சென்டர்உணவகத்தின் மூலம் 50 நபர்களுக்கு தேநீர் வழங்கியதையும், மேற்கண்ட பணிக்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியலிருந்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு

57இன்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மாமன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.6135/2025/பி3)**

**தீர்மானம் எண்.** 903 : பதிவு செய்யப்பட்டது.

<u>பொருள் எண். 5 :</u>

நாமக்கல் மாநகராட்சியில் 2024-2025ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி ஆகிய மூன்று நிதிக்கான கணக்கிற்கான வங்கி கைசாத்துடன் பொதுப் பேரேட்டுடன் (General Ledger) இணக்கம் செய்தும், 01.04.2024 முதல் 31.03.2025-க்கான மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் ஒவ்வொரு வங்கி கணக்கிற்கும் தனித்தனியாக வரவு செலவு விவரங்கள், ஆண்டு கணக்குகளுக்கான Trial Balance, Income & Expenditure, A/C Balance Sheet & Schedules தயார் செய்து கொடுக்கும் பணிக்கு23.05.2025ஆம் தேதிய மாமன்ற தீர்மானம் எண்.24இன்படி விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்றுவிலைப்புள்ளிகள்வரப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Ozone Technologies,<br>15, (Old No.6), Lake View Road, Kottur,<br>Chennai – 600 085 | 2,98,000/- |
| 2. | Thiru. R. Satheesh Kumar,<br>Raj Solutions, No.55/15th East Street,<br>Kamaraj Nagar, Thiruvanmmiyar,<br>Chennai – 600 041. | 2,90,000/- |
| 3. | Thiru. A. Alagarsamy,<br>Sanjay Solutions,<br>No.14G AVR Line South Colony,<br>Komarapalayam | 2,50,000/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்றுவிலைப்புள்ளிகள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி சமர்ப்பித்த Sanjay Solutions, Komarapalayam நிறுவனத்தின் விலைப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2011/2025/பி1)**

**தீர்மானம் எண்.** 904 : அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 6 :</u>

நாமக்கல் மாநகராட்சியுடன் கடந்த 21.01.2025அன்று இணைக்கப்பட்ட வகுரம்பட்டி ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள டிரினிட்டி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவனத்திற்கு, ஏற்கனவே வகுரம்பட்டி ஊராட்சி மூலமாக சொத்துவரி வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பிறகு வரிவிதிப்பு எண்கள்.051/501/903267 மற்றும் 051/501/903243 வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வரிவிதிப்புகளுக்குUTIS மென்பொருளில் கடந்த 2022-2023ஆம் நிதியாண்டு முதல் ஆண்டு ஒன்றிற்கு ஒரு வரிவிதிப்பிற்கு ரூ.5,03,443/-வீதம் 2022-2023 முதல் 2024-2025 வரைமொத்தம் ரூ.15,10,329/-ஆக இரண்டு வரிவிதிப்புகளுக்கு ரூ.30,20,658/- என கேட்பு நிலுவையில் உள்ளது. டிரினிட்டி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாமக்கல் நிறுவனத்தின் 25.09.2025ஆம் தேதிய கடிதத்தில் தாங்கள் வகுரம்பட்டி

ஊராட்சியாக இருந்த சமயத்தில் 2022–2023ஆம் முதல் அரையாண்டு வரை ஒரு நிதியாண்டிற்கு ஒரு வரிவிதிப்பிற்கு சொத்துவரியாக ரூ.1,48,071/–வீதம் இரண்டு வரிவிதிப்புகளுக்கு மொத்தம் ரூ.2,96,142/– மட்டுமே செலுத்தப்பட்டு வந்ததாகவும், தற்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பிறகு கூடுதலாக வரிவிதிக்கப்பட்டுள்ளது எனவும் ஆட்சேபணை தெரிவித்து தங்களுக்கு வகுரம்பட்டி ஊராட்சியில் செலுத்திய சொத்துவரி தொகையையே செலுத்த அனுமதிக்குமாறு கோரப்பட்டு அதற்கான ஆவணங்கள் (2021–2022 மற்றும் 2022–2023ஆம் ஆண்டிற்கான வீட்டுவரி ரசீது நகல்கள்) இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.5644/2025/அ1, நாள்.08.12.2025 வாயிலாக வகுரம்பட்டி கிராம பஞ்சாயத்தாக இருந்த சமயத்தில் டிரினிட்டி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு ஒரு வரிவிதிப்பிற்கு ரூ.5,03,443/– என இரண்டு வரிவிதிப்புகளுக்கும் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தும் அத்தொகையே மாநகராட்சி கணினி UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டு கேட்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து நிலுவைத் தொகையினை உடனடியாக செலுத்தவும் கோரப்பட்டது. அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் மேற்கண்ட கல்வி நிறுவனக்கட்டடங்கள் மறு அளவீடு செய்யப்பட்டு மறு அளவீட்டின்படி கேட்பு நிலுவையில் உள்ள நிதியாண்டிலிருந்து சொத்துவரி மறுநிர்ணயம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து டிரினிட்டி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவனத்தின் 17.12.2025ஆம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலக கடிதத்தின் அடிப்படையில் வகுரம்பட்டி ஊராட்சியாக இருந்த சமயத்திலேயே தங்களது நிறுவனத்திற்கு சொத்துவரி தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டது தொடர்பாக உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) நாமக்கல் அவர்களுக்கு கடிதம் வாயிலாக கோரப்பட்டதில் அனைத்து ஆவணங்களும் மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் தங்களால் இதனை சரிசெய்ய இயலாது என தெரிவித்துவிட்டதாகவும், ஆதலால் கட்டடத்தை மறு அளவீடு செய்து அதன் அடிப்படையில் சொத்துவரி மறுநிர்ணயம் செய்து கொடுக்கவும் மேலும் அத்தொகையில் தாங்கள் ஏற்கனவே 2022–2023ஆம் நிதியாண்டிற்கு செலுத்திய தொகையினை ஈடுசெய்து வழங்கவும் கோரப்பட்டுள்ளது.

வகுரம்பட்டி ஊராட்சியிலிருந்து நாமக்கல் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்தபோது 2022–2023ஆம் நிதியாண்டிற்கான ஊராட்சி கேட்பு பதிவேட்டில் இரண்டு வரிவிதிப்புகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.2,96,142/– (நூலகவரி மற்றும் கூடுதல் கட்டணம் (surcharge) உட்பட) கேட்பு எழுதப்பட்டுள்ளது. ஆனால் ஊராட்சியில் கணினிமயமாக்கும் போது ஒரு வரிவிதிப்பிற்கு சொத்துவரி தொகை ரூ.2,96,142/– மொத்தமாக பதிவேற்றம் செய்யப்பட்டு அதற்கு நூலகவரி 10சதவீதம் மற்றும் கூடுதல் கட்டணம் (surcharge) 60சதவீதம் உட்பட மொத்தம் ரூ.5,03,443/– என தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட கேட்பு UTIS மென்பொருளிலும் நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகம் NIC லியிருந்து Data Transfer மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட கல்வி நிறுவனத்தின் கடிதத்தின் அடிப்படையில் கடந்த 20.12.2022 அன்று டிரினிட்டி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடங்கள் வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்கள் மூலம் கீழ்க்கண்டவாறு மறுஅளவீடு செய்யப்பட்டது.

| வ. எண். | கதவு இலக்க எண். | தற்போது UTIS இல் உள்ள கேட்பு | | மறு அளவீட்டின்படி கணக்கிடப்பட்ட கேட்பு | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டு ஒன்றிற்கு ரூ. | 2022–2023 முதல் 2024 – 2025 வரை நிலுவை தொகைரூ. | அளவீடு (சதுரஅடி) | ஆண்டு ஒன்றிற்கு ரூ. | 2022–2023 முதல் 2024 – 2025 வரை நிலுவை தொகைரூ |
| 1 | 4/138–1 | 5,03,443/– | 15,10,329/– | 142665 | 2,42,530/– | 7,27,890/– |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 4/138-2 | 5,03,443/- | 15,10,329/- | 74849 | 1,27,244/- | 3,81,732/- |
| **மொத்தம்** | | 10,06,886/- | **30,20,658/-** | 217514 | 3,69,774/- | **11,09,322/-** |

மேற்கண்ட கணக்கீட்டின்படி 2022-2023 முதல் 2024-2025 நிதியாண்டு வரை 3 நிதியாண்டுகளுக்கு இரண்டு வரிவிதிப்புகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.19,11,336/- கூடுதலாக உள்ளதை தள்ளுபடி செய்யவேண்டியுள்ளது.

எனவே டிரினிட்டி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடம் அமைந்துள்ள வகுரம்பட்டி ஊராட்சி பகுதி கடந்த 21.01.2025அன்று முதல் நாமக்கல் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு அதன் சொத்துவரி விவரங்கள் மாநகராட்சிUTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டதை கருத்தில் கொண்டும், வகுரம்பட்டி ஊராட்சியாக இருந்த சமயத்தில் சொத்துவரி கேட்பு கணினியில் ஆவணங்களின்படி இல்லாமல் தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டு தற்போது மாநகராட்சி UTIS மென்பொருளில் அவ்வாறே கேட்பு எழுப்பப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், மேற்கண்ட கட்டடத்திற்கு 2022-2023ஆம் நிதியாண்டு முதல் தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்ட வரிவிதிப்பு எண்கள் 051/501/903267 (கதவு இலக்க எண்.4/138/1) மற்றும் 051/501/903243 (கதவு இலக்க எண்.4/138/2) ஆகியவைகளை 2022-2023 முதல் 2024-2025 வரை உள்ள சொத்துவரி மொத்த நிலுவை கேட்புடன் உரிய முறையில் தள்ளுபடி செய்து தற்போது உள்ள பரப்பளவிற்கு ஏற்ப 2022-2023ஆம் நிதியாண்டு முதல் சொத்துவரி மறு நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.5644/2025/அ1 )**

**தீர்மானம் எண். 905 :** அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 7 :

நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 29.10.2025அன்று அனைத்து வார்டுகளிலும் வார்டு சிறப்பு கூட்டங்கள் நடத்த உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட வார்டு சிறப்பு கூட்டம் நடைபெறுவது தொடர்பாகவும் அவற்றில் விவாதிக்கப்படவேண்டிய பொருட்கள் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த 20000 துண்டு பிரசுரங்கள் (A3 Size Colur) அச்சடித்து வழங்கவும், முக்கிய இடங்களில் வைக்க 5 பிளக்ஸ் பேனர்கள் மற்றும் அந்தந்த வார்டுகளில் பொருத்த தேவையான பிளக்ஸ் பேனர்கள் 26 எண்ணிக்கைகள் பொருத்தும் பணி ஆகியவைகளை ரூ.1,15,000/- செலவினத்தில் மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி 24.10.2025 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. | | |
|---|---|---|---|---|
| | | ஒரு துண்டு பிரசுரத்திற்கு (A3 Size Colur) | ஒரு பிளக்ஸ் பேனர் தட்டியுடன் (10x10) | ஒரு பிளக்ஸ் பேனர் (4x2) |
| 1. | Dharani Stickers, Digital Flex & Inkjet Printing, No. 20, Trichy Main Road, Namakkal – 637 001 | ரூ. 3/- | ரூ. 8000/- | ரூ.500/- |
| 2. | Bloom Cards, LMR Arcade, Salem Road, Namakkal – 637 001 | ரூ. 3.50/- | ரூ. 8200/- | ரூ. 575/- |
| 3. | RK Stickers, 6/24-A5, Paramathi Road, Opp. Sidco, Namakkal – 637 001 | ரூ. 4.25/- | ரூ. 8250/- | ரூ. 600/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண். 1இல் காணும் Dharani Stickers, Namakkal விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளிகளை விட குறைவாக உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் துண்டு பிரசுரங்கள் மற்றும் பிளக்ஸ் பேனர்கள் அச்சடித்தமைக்கும், மேற்கண்ட பணிக்கான செலவினத்தை மாநகராட்சி வருவாய் நிதியலிருந்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57இன்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மாமன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.6162/2025/அ1 )**

**தீர்மானம் எண்.** 906 : அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண். 8 :</u>**

நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 04.11.2025 முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) பணிகள் நடைபெற்று வருகிறது. வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் சேகரிக்கப்படும் கணக்கெடுப்பு படிவங்களில் உள்ள புள்ளி விவரங்களை BLO Appஇல் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவேற்றம் செய்ய நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.647/2024, நாள்.16.09.2024இன் வாயிலாக 2024-2025ஆம் நிதியாண்டிற்கு தற்காலிகத் தினக்கூலி பணியாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி (நாளொன்றுக்கு நபர் ஒன்றிற்கு ரூ.792/-) அடிப்படையில் தற்காலிகமாக 20 நாட்களுக்கு 20 தரவு உள்ளீட்டாளர்களை (Data Entry Operators) நியமனம் செய்யும் பணியினை ரூ.3,25,000/- செலவினத்தில் மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி 13.11.2025 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | BLO Appஇல் பதிவேற்றம் செய்யும் தரவு உள்ளீட்டாளர்கள் நாளொன்றுக்கு நபர் ஒன்றிற்கு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | TamilNadu Water Supply & Drainage System, Rasipuram | 785/- |
| 2. | JP Construction, Namakkal | 793/- |
| 3. | Thiru. K.G. Srinivasan, Namakkal | 795/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண். 1இல் காணும் TamilNadu Water Supply & Drainage System, Rasipuram நிறுவனத்தின் மூலம் தற்காலிகமாக 20 நாட்களுக்கு 20 தரவு உள்ளீட்டாளர்களை நியமனம் செய்யப்பட்டதையும், மேற்கண்ட பணிக்கான செலவினத்தை மாநகராட்சி வருவாய் நிதியலிருந்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57இன்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** : மாமன்றம் பதிவு செய்யலாம். **(ந.க.எண்.6512/2025/அ1 )**

**தீர்மானம் எண்.** 907 : அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண். 9 :</u>**

நாமக்கல் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு-4ற்கு மற்றும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 12 கிராம ஊராட்சி பகுதிகளுக்கும் தேவைப்படும் கிருமி நாசினியான நீர்த்த சுண்ணாம்புதூள் 50 டன் கொள்முதல் செய்யும் பணிரூ.4,72,500/-க்குமேற்கொள்ள மாமன்ற தீர்மானஎண். 658, நாள்:28.11.2025 வாயிலாக முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 28.11.2025அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டுஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. Sri Athanuramman Traders, Namakkal - ரூ. 4,90,000/-

2. Sri Kaliyamman Trading Corporation, Namakkal – ரூ. 4,72,500/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டுஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டுஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த Sri Kaliyamman Trading Corporation, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.6962/2025/எச்1)**

**தீர்மானம் எண்.** 908 : அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 10 :**

நாமக்கல் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு – 1, 2 மற்றும் 3ற்கும் தேவைப்படும் கிருமி நாசினியான நீர்த்த சுண்ணாம்புதூள் 50 டன் கொள்முதல் செய்யும் பணிரூ.4,72,500/– க்குமேற்கொள்ள மாமன்ற தீர்மானஎண். 657, நாள்:28.11.2025 வாயிலாக முன் அனுமதி வழுங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 28.11.2025அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டுஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1.Rudra – Hi– Tech Precision, Hosur, Krishnagiri – ரூ. 4,80,000/–

2. Jeyam Industries, Denkanikotta, Krishnagiri – ரூ. 4,72,500/–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டுஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டுஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த Jeyam Industries, Denkanikotta, Krishnagiri நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.6021/2025/எச்1)**

**தீர்மானம் எண்.** 909 : பதிவு செய்யப்பட்டது.

ஆணையாளர்,
நாமக்கல் மாநகராட்சி